# கிருபையுள்ள வார்த்தை®


**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22

Vol - 23 | MAY மே | 2022

ஆண்டு சந்தா ரூ. 100/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-


# குடும்பத்தினை உண்டாக்கியதும் அதில் தெய்வீகத்தை உருவாக்குவதும் தேவனுடைய திட்டமாக இருக்கின்றது...




கௌரவ ஆசிரியர் **BETTY CHOATE** ஆசிரியர் **பிலேமோன் ராஜா**


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 7 |
| ஆதி குடும்பம் | 9 |
| வரலாற்றில்.. | 10 |
| சிறுவர் பகுதி | 11 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,M.B.A (Bible Studies)
**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்

அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L



## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**நம்பிக்கை T.V. யில்**

ஞாயிறு மதியம் 3:30 மணி

**தமிழன் T.V. யில்**

ஞாயிறு காலை 7:00 மணி

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் - கிருபையுள்ள வார்த்தை)

**OUR ENGLISH TV PROGRAM**

**SALVATION TV**

Every Sundays 2pm

Speakers:
Jerry Bates & Kingsly Rajah



**கிருபையுள்ள வார்த்தை புதிய வெளியீடு**

**கிருபையின் கீதங்கள்**

விபரங்களுக்கு :

**92 4421 4421, 92 4431 4431**


**பாடல் புத்தகம்**

421 பக்கங்கள்
514 தமிழ் பாடல்கள்
29 ஆங்கில பாடல்கள்
100 சிறுவர் பாடல்களுடன்

**கிருபையுள்ள வார்த்தை**

நமது குடும்பத்தினை தேவ திட்டப்படி
தெய்வீகமாக்க உதவும்
தேவ ஆவியின் வார்த்தை

**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




Send Postal Expenses only
and
receive
The Voice of Truth
International

# தெய்வீக குடும்பம்

ஆசிரியர் உரை

P.C. பிலேமோன் ராஜா



அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

இந்த மாதம் நமது குடும்பத்தினை தெய்வீக குடும்பமாக அதாவது தேவபக்தியுள்ள குடும்பமாக உருவாக்கிட என்ன செய்ய வேண்டும் என்பதனை குறித்து உங்களுடன் பகிர்ந்துக்கொள்வதில் கர்த்தருக்குள் அகமகிழ்கின்றேன்.

## 1. தெய்வீக தொடக்கம்

தெய்வீக குடும்பத்தினை கட்டுவிக்க தெய்வீக தொடக்கம் அவசியம். தெய்வீக தொடக்கம் என்பது ஒருவர் பாவ மன்னிப்பிற்கென்று திருமுழுக்கு பெற்றுக்கொள்ளும் போது துவங்குகின்றது. முதல் நூற்றாண்டில் இப்படிப்பட்ட நிறைய குடும்பங்களை, புதிய ஏற்பாட்டிலே குறிப்பாக அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் நாம் படிக்க முடிகின்றது.

### பிலிப்பிய சிறைச்சாலை அதிகாரி மற்றும் அவரது குடும்பம்

**அப்போ 16:30–33** "அவர்களை வெளியே அழைத்து வந்து; ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்என்றான்,அதற்குஅவர்கள்; கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும்உன்வீட்டாரும்இரட்சிக்கப்படுவீர்கள்என்று சொல்லி, அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடையவசனத்தைப்போதித்தார்கள்.மேலும் இராத்திரியில்" அந்நேரத்திலேதானே அவன் அவர்களை அழைத்துக்கொண்டுபோய்,அவர்களுடைய காயங்களைக்கழுவினான்.அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள்."

### இரத்தாம்பர வியாபாரி லீதியாள் மற்றும் அவரது குடும்பம்

**அப்போ 16:14,15** "அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரந்தாம்பரம்விற்கிறவளும்தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீகேட்டுக்கொண்டிருந்தாள்;பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத்திறந்தருளினார்.அவளும்அவள் வீட்டாரும்ஞானஸ்நானம்பெற்றபின்பு, அவள் எங்களை நோக்கி; நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டில் வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்."

### நூற்றுக்கதிபதியாகிய கொர்நெலியு மற்றும் அவரது குடும்பம்

**அப்போ 10:47,48** "அப்பொழுதுபேதுரு;நம்மைப் போலப்பரிசுத்தஆவியைப்பெற்றஇவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமாஎன்றுசொல்லி,கர்த்தருடைய நாமத்தினாலேஅவர்களுக்குஞானஸ்நானங் கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சிலநாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள்."

தெய்வீக துவக்கத்திற்கு நாம் குடும்பமாக, அதாவது குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் கர்த்தருக்குள் திருமுழுக்கிலே கீழ்படிய வேண்டும். ஒருவர் பாவமன்னிப்பிற்கென்று திருமுழுக்கு பெறாதவரை அவர் நல்லவராகவும், தேவ பக்தி நிறைந்தவராகவும் இருந்தாலும், தெய்வீக குடும்பத்திற்கு அந்நியரே ஆவார். ஏனெனில் இரட்சிக்கப்படுகின்றவர்களை தான் கர்த்தர் தன்னுடைய தெய்வீக குடும்பமாகிய சபையில் சேர்க்கின்றார். **(அப்போ 2:47).**

மேலும், தெய்வீக குடும்பத்திலிருந்து, அதாவது குடும்பமாக இரட்சிக்கப்பட்டவர்களின், குடும்ப தலைவராக இருப்பரையே சபையின் மூப்பராக தேர்ந்தெடுக்க வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவரும் வெளிப்படுத்தியுள்ளார் **(1 தீமோ 3:1–5).** ஆகையால் தெய்வீக துவக்கத்திற்கு குடும்பமாக இரட்சிக்கப்படுவது ஆரம்பமாகும். ஆகையால் இரட்சிக்கப்பட்டவர்கள், தங்கள் குடும்பங்களில் இரட்சிக்கப்படாதவர்களுக்காக, வெறுமனே ஜெபிக்கின்றவர்களாகவும், அவர்களுக்கு போதிக்கின்றவர்களாகவும் இராமல், அவர்களுக்கு முன்பாக முன்மாதிரியான வாழ்வு வாழ வேண்டியது அவசியமாகும். வார்த்தைக்கு வலிமை சேர்ப்பது, அதின்படி வாழ்கின்ற செயலே ஆகும். ஆகையால் தான் ஆண்டவர் இயேசு ஒப்பற்ற போதகராக மாத்திரமில்லாமல், நாம் அனைவரும் பின்பற்ற வேண்டிய ஒரே

முன்மாதிரியாகவும் இருக்கின்றார் **(2 பேதுரு 2:20-22).**

இரட்சிக்கப்பட்ட வாலிப சகோதரனோ, சகோதரியோ தங்கள் திருமண பந்தத்தினை கிறிஸ்துவிற்குள் செய்கின்ற போது, தங்களுடைய குடும்பம் தெய்வீகமானதாக இருக்க துவக்குகின்றனர். இதுவும் மிகச்சிறந்த துவக்கம் தான். இது தெய்வீக குடும்பத்தினை உருவாக அடிப்படையாகவும் இருக்கின்றது. அந்நிய நுகம் என்பது எவ்வகையிலும் நமது ஆவிக்குரிய வாழ்விற்கு தீங்காகவே அமையும் என கர்த்தர் ஆதிகால முதலே எச்சரிக்கின்றார் **(யாத் 34:16, உபா 7:3).**

ஆகையால் தான் தெய்வீக திருமண பந்தம் என்பது தெய்வீக குடும்ப துவக்கத்திற்கு அவசியமானதாக இருக்கின்றது. அதனால் தான் புதிய ஏற்பாட்டிலே அதன் அவசியத்தினை இன்னும் வலியுறுத்துகின்றார். **2 கொரி 6:14,18** "அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்."

## 2. தெய்வீக பழக்கம்

தெய்வீக குடும்பத்தினை கட்டுவிக்க, தெய்வீக துவக்கம் உள்ள குடும்பம், அடுத்ததாக தெய்வீக பழக்கத்தினை கொண்டிருக்க வேண்டும்.

தினமும் பல் துலக்குதல், உடலை தூய்மை செய்தல். உடற்பயிற்சி செய்தல் போன்ற சில செயல்களை நாம் சரீரத்தினை தூய்மையாகவும், பலமாகவும் வைத்துக்கொள்ள நமக்கு சில பழக்கங்கள் இருக்கின்றது போலவே, நம் குடும்பத்தினை தூய்மையாக மற்றும் பலமானதாக வைத்துக்கொள்ள சில ஆவிக்குரிய பழக்கங்கள் அவசியமானதாகும். அது வளர்ச்சியையும் வாழ்வின் சவால்களையும் சந்திக்க உதவும். **எபிரேயர் 5:13,14** "பாலுண்கிறவன்கு ழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மைதீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானோந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்."

தினசரி குடும்பமாக இணைந்து, ஒன்றாக கூடி கர்த்தரை துதித்து பாட்டு பாடி, பைபிள் படித்து, ஜெபம் செய்ய வேண்டும். குடும்ப ஜெபம் இல்லாத வீடு கூறை இல்லாத வீடு போன்றதாகும். ஆகையால் தினமும் குடும்பம் கூடி ஜெபிக்கின்ற பழக்கத்தினை விட்டுவிட வேண்டாம். **மத்தேயு 18:19,20** "அல்லாமலும், உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்திலிருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில் இரண்டுபேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்."

குடும்பமாக கூடி பிரார்த்தனை செய்வது எவ்வளவு முக்கியமோ, அதேபோல ஒவ்வொரு தனி நபரும் தினமும் தனிப்பட்ட வகையிலும் கர்த்தருடைய வேதத்தினை தியானித்து ஜெபிக்கின்ற பழக்கமுடையவராக இருக்க வேண்டும். அது நம்மை பாக்கியவான்களாகவும், நற்குணசாலியாகவும் மாற்ற உதவியாக இருக்கும். **(சங்கீதம் 1:2, அப்போ 17:11).** தங்களால் ஆன மட்டும் தினசரி நன்மை செய்ய வேண்டும். நன்மை செய்வது என்பது கர்த்தருடைய இயல்பாக இருக்கின்றபடியினால் **(அப்போ 9:28).** அது ஒரு கிறிஸ்தவரின் அடிப்படை பண்பாக இருக்க வேண்டும். ஏனெனில் அதற்காகவே நாம் மறுபடியும் பிறப்பிக்கப்பட்டுள்ளோம். **எபே. 2:10** "ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். ''அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்."

தாங்கள் ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படிந்த நற்செய்தியை மற்றவர்களுக்கும் அறிவிக்க வேண்டும். தினசரி குறைந்தது ஒரு நபருக்காவது, ஒரு நிமிடமாவது

செலவழித்து, ஒரு கைபிரதியாவது கொடுக்ககூடிய பழக்கத்தினை கொண்டிருப்பதும் அவசியமானதாகும். **மாற்கு 16:15** “பின்பு,அ வர் அவர்களை நோக்கி ; நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.”

## 3. தெய்வீக தொடர்பு

தெய்வீக குடும்பத்தினை கட்டுவிக்க, தெய்வீக பழக்கம் உள்ள குடும்பம் அந்த பழக்கங்கள் தொடர்ந்திட, அடுத்ததாக தெய்வீக தொடர்புகளை கொண்டிருக்க வேண்டும்.

**1 யோவான் 1:3** ‘‘நீங்கள்எ ங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதைஉ ங்களுக்கும்அ றிவிக்கிறோம்: எங்களுடையஐ க்கியம்பி தாவோடும்அ வருடைய குமாரனாகியஇ யேசுகி றிஸ்துவோடும்இ ருக்கிறது.” யோவான் மற்றும் அப்போஸ்தலர்கள் தங்கள் ஐக்கியம் கிறிஸ்துவோடும், பிதாவோடும் இருப்பதாக அறிவித்தனர். அதாவது தங்களுக்கும் கர்த்தருக்குமான உறவில் அவர்கள் சரியாக இருப்பதாக அறிவிக்கின்றனர். ஏனெனில் தெய்வீக குடும்பம் வளர இது அவசியமானதாகும்.

நமக்கும் தெய்வீக தொடர்புகள் அவசியம் அதனால்தான் ஆவியானவர் சபை கூடிவருதலை விட்டுவிடாதிருங்கள் என புத்திசொல்லி, கட்டளையிடுகின்றார். அவைகள் நம்மை அன்பிற்கும், நல்ல செயல்களை செய்வதற்கும் தூண்டுவதாக இருக்கும். **எபிரேயர் 10:24,25** “மேலும்,அ ன்புக்கும்ந ற்கிரியைகளுக்கும்ந ாம் ஏவப்படும்படிஒ ருவரையொருவர்க வனித்துச பை கூடிவருதலைச்சி லர்வி ட்டுவிடுகிறதுபோலந ாமும் விட்டுவிடாமல்,ஒ ருவருக்கொருவர்பு த்தி சொல்லக்கடவோம்ந ாளானதுச மீபித்துவருகிறதை எவ்வளவாய்ப்ப ார்க்கிறீர்களோஅ வ்வளவாய்ப் புத்திசொல்ல வேண்டும்.”

ஆகையால், சபையாக ஜெபிக்கவோ, வேதத்தினை ஆராயவோ, தொழுகை செய்யவோ கூடி வரும்போது, நாமும் தவறாது பங்கு பெற வேண்டும். விறகு எரிகின்ற நெருப்பின் குவியலில் இருக்கும் போதுதான் அனலாகவும், எரிவதாகவும் இருக்கும். தனித்திருந்தால் அது தன் நெருப்பையும், அனலையும் இழந்து அணைத்துப்போம். நாம் பரிசுத்தவான்களோடு, பரிசுத்த காரியங்களில் இணைந்திருக்கும் போது அனலுள்ளவர்களாகவும், ஆண்டவருக்கு பிரயோஜனமானவர்களாகவும் இருக்க முடியும். **ரோமர் 12:11** “அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள் ஆவியிலே அனலாயிருங்கள் ஆவியிலேஅ னலாயிருங்கள்க ர்த்தருக்குஊ ழியஞ் செய்யுங்கள்.”

உங்களை சத்தியத்தின்படி வழிநடத்த, சத்தியத்திற்காக வைராக்கியமாக வாழ்கின்ற உங்கள் ஊழியரோடு, உங்களை சத்தியத்திற்குள் வழி நடத்துகின்றவரோடு, சபையின் மூப்பர்கள் போன்றோரோடு நல்ல இணக்கமான உறவுமுறையை கடைபிடியுங்கள். அவர்களது தொடர்பு நம்மை நல்ல பழக்க வழக்கத்திற்கும், நல்ல பண்புகளிற்கும் வழிநடத்தும். நீங்களே வலியச்சென்று, உங்களை கீழ்படிகின்றவர்களாக ஒப்புக் கொடுங்கள். ஏனெனில் நம் அனைவரின் இயல்பும் தனிச்சையாக, சுதந்திரமாக செயல்படுவதற்காக மற்றவர்களின் நல்ல ஆலோசனைகளைகூட அவசியமற்றதாக எண்ணுவதாக இருக்கின்றது. **எபிரேயர் 12:7,17** “தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின்மு டிவைந ன்றாய்ச்சி ந்தித்து, அவர்களுடையவி சுவாசத்தைப்பி ன்பற்றுங்கள். உங்களைந டத்துகிறவர்கள்,உ ங்கள் ஆத்துமாக்களுக்காகஉ த்தரவாதம் பண்ணுகிறவர்களாய்வி ழித்திருக்கிறவர்களான படியால்,அ வர்கள்து க்கத்தோடேஅ ல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்துஅ டங்குங்கள்;அ வர்கள்து க்கத்தோடே அப்படிச்செ ய்தால்அ துஉ ங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே.”

## 4. தெய்வீக வாழ்வு

தெய்வீக குடும்பத்தினை கட்டுவிக்க, தெய்வீக பழக்கம் உள்ள குடும்பம் அந்த பழக்கங்கள் தொடர்ந்திட, அடுத்ததாக தெய்வீக தொடர்புகளை கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு கொண்டுள்ள தெய்வீக காரியங்களில் நாம் நிலை நிற்க வேண்டும் மற்றும் கனிதர வேண்டும் அவ்வாறு செய்வதே தெய்வீக வாழ்வாகும். **1 யோவான் 15:5** “நானே திராட்சச் செடி, நீங்கள் கொடிகள், ஒருவன் என்னிலும் நான்அ வனிலும்நி லைத்திருந்தால்,அ வன்மி குந்த கனிகளைக்கொ டுப்பான்;எ ன்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.”

அதற்கென்றே அப்போஸ்தலர்கள் தெரிந்துக்கொள்ளப்பட்டதாக ஆண்டவர் இயேசு சொன்னார். **யோவான் 15:16** “நீங்கள்எ ன்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து

கொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும் படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களைஏ ற்படுத்தினேன்." நாமும் ஆண்டவர் இயேசு கிறஸ்துவிற்குள் பிதாவாகிய தேவனாலே அவ்வாறே தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக இருக்கின்றோம். **வெளி 17:14** "இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனேயு த்தம்ப ண்ணுவார்கள் ஆட்டுக்குட்டியானவர்க ர்த்தாதிக ர்த்தரும்ர ாஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால்அ வர்களைஜெ யிப்பார்; அவரோடுகூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும்உ ண்மையுள்ளவர் களுமாயிருக்கிறார்கள் என்றான்.

தெய்வீக காரியங்கள் மற்றும் பண்புகளில் நிலைத்திருத்தல் என்பது நமது குடும்பத்தினை தெய்வீக குடும்பமாக கட்டுவதாகவும், தெய்வீக கனிகொடுத்தல் என்பது, நாம் அநேக தெய்வீக குடும்பங்கள் கட்டப்பட, கர்த்தருடைய நாமம் மகிமைப்படும்படி வாழ்வதாகவும் இருக்கின்றது. நாம் நற்செய்தியை சொல்லி, அநேக குடும்பங்களில் கர்த்தருடைய சத்தத்தினை தொனித்து, சித்தத்தினை நிறைவேற்றிட அழைக்கப்பட்டவர்களும், தெரிந்து கொள்ளப்பட்டவர்களுமாக இருக்கின்றோம். **1 பேதுரு 2:9** "நீங்களோ,உ ங்களைஅ ந்தகாரத்தினின்று தம்முடையஆ ச்சரியமானஒ ளியினிடத்திற்கு வரவழைத்தவருடையபு ண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத்தெ ரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும்,ர ாஜரீகமானஆ சாரியக்கூ ட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்."

நமது சாரமுள்ள வாழ்வு, அநேகரை கர்த்தரை நோக்கி திருப்புவதாக இருக்க வேண்டும். நாம் நமக்காக வாழாமல், கர்த்தருக்காக வாழும்போது இது சாத்தியமே. அதாவது நாம் இந்த உலகத்தின் பின்னே, நாம் மாம்ச இச்சைகளை நிறைவேற்றும்படி வாழாமல், கர்த்தருக்கு பயந்து வாழும்போது இது சாத்தியமே. ஆகையால் அதற்கேற்ற தெய்வீக வாழ்வை, குடும்பமாக வாழ்வோம். **2 பேதுரு 1:10,11** "ஆகையால்,ச கோதரரே,உ ங்கள்அ ழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும்உ றுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்இ வைகளைச்செ ய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடையக ர்த்தரும்இ ரட்சகருமாகியஇ யேசு கிறிஸ்துவினுடையநி த்தியரா ஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்."

இறுதியாக, எனக்கன்பானவர்களே, நாம் நமது குடும்பத்தினை தெய்வீக குடும்பமாக கட்டுவிக்க, தெய்வீக துவக்கம், தெய்வீக பழக்கம், தெய்வீக தொடர்புகள் கொண்டிருந்து, தெய்வீக வாழ்வு வாழ்ந்து, நிலைத்திருந்து கனிதருவோம். எல்லாம்வல்ல கர்த்தர் இந்த தெய்வீக முயற்சியை ஆசீர்வதிப்பாராக.

அன்புடன்,
**–ஆசிரியர்**


## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 7.00 - 7.15 a.m (TAMILNADU Contact Mobile : **92 4421 4421 & 92 4431 4431**) **Nambikai TV :** *Every Sunday 3.30 p.m.* **Salvation TV :** *Every Sunday 2.00 p.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.

# சூனேமியாளின் குடும்பம்

சகோதரி : பேபி ராஜா



பிரியமான சகோதரிகள் அனைவருக்கும் இயேசுவின் நாமத்தில் எனது வாழ்த்துக்கள் மற்றும் ஸ்தோத்திரங்களை தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த முறை உங்களுடன் சூனேமியாளின் குடும்பத்தினை பற்றி தியானம் செய்வோம்.

2 ராஜாக்கள் 4ம் அதிகாரத்தில் நாம் சூனேமியாளையும் அவளது குடும்பத்தினையும் பற்றி படிக்கின்றோம்.

## 1. உபசரிக்கின்ற குடும்பம்

**2 ராஜாக்கள் 4:8** “பின்பு ஒருநாள் எலிசா சூனேமுக்குப் போயிருக்கும்போது, அங்கேயிருந்த கனம்பொருந்திய ஒருஸ் திரீஅ வனைப்பே பாஜனம்பண்ணவ ருந்திக் கேட்டுக்கொண்டாள்; அப்படியே அவன் பயணப்பட்டு வருகிறபோதெல்லாம் போஜனம் பண்ணும்படி அங்கே வந்து தங்குவான்.”

இவளுடைய பெயர் சொல்லப்படவில்லை. இவளது ஊரை வைத்தே இவளை நாம் அழைக்கின்றோம். சூனேம் ஊரை சேர்ந்தவள் அதினால் சூனேமியாள் என அழைக்கின்றோம். ஊழியர்களை தாங்குவதிலும், கணம் செய்வதிலும் முன்மாதிரியான இந்த குடும்பத்தினர். நன்கு உபசரிக்கின்றவர்களாக இருப்பதை நாம் அறிய முடிகின்றது. பெண்களாகிய நமக்கு கொடுக்கின்ற குணம் என்பது ஆண்டுகளோடு ஒப்பிடும்போது மிக குறைவு தான். ஆம். இதனை ஒத்துக்கொள்ள தான் வேண்டும். அப்படி நாம் கொடுத்தாலும் அதில் நமக்கு என்ன லாபம் என பார்க்கும் எண்ணமும் இருக்கும். ஒருவேளை நாம் தாராளமாக கொடுப்பது போல தோன்றினாள், நாம் கொடுத்தவர்களை பாருங்கள். அவர்கள் நம் குடும்பத்தினராக இருக்கலாம். இதில் சில சகோதரிகள் இந்த சூனேமியாளை போல விதிவிலக்காக இருக்கலாம். ஆயினும் கர்த்தர் நம் அனைவருமே இந்த காரியத்தில் சூனேமியாளை போலவே இருக்கவே விரும்புவார். எந்த எதிர்பார்ப்புமின்றி உபசரிக்கின்ற குடும்பமாக நம் குடும்பம் இருக்க வேண்டும் **(எபிரேயர் 13:2)**.

## 2. மற்றவர்களை மேன்மையாக எண்ணுகின்ற குடும்பம்

**2 ராஜாக்கள் 4:9,10** “அவர் தன் புருஷனை நோக்கி; இதோ,ந ம்மிடத்தில்எ ப்போதும்வ ந்துபோகிற தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன்.ந ாம்ெ மத்தையின்மேல்ஒ ருசி றிய அறைவீட்டைக் கட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜையையும், நாற்காலியையும், குத்துவிளக்கையும் வைப்போம் அவர் நம்மிடத்தில் வரும்போது அங்கே தங்கலாம் என்றாள்.”

இந்த குடும்பத்தாரிடம் நாம் கற்க வேண்டிய மற்றொரு குணம், மற்றவர்களை மிகவும் கணத்திற்குரியவர்களாக எண்ணுவது. இவர்களது குடும்பத்தினை பற்றி சொல்லும்போதே, அந்த ஊரில் கணம்பொருந்திய குடும்பம் என்று ஆவியானவர் அறிமுகம் செய்கின்றார் (1 ராஜா 4:8). நமக்கு புரியும் மொழியில் சொல்வதென்றால், ராயல் பேமிலி என்று சொல்லலாம். சமுதாயத்தில் உயர்வாக மதிக்கப்பட்டவர்கள். ஆனால் இப்படிபட்டவர்கள் பொதுவாக மற்றவர்களை குறைவாக தான் நினைப்பார்கள் மற்றும் நடத்துவார்கள். ஆனால், இந்த குடும்பம் வித்தியாசமானதாக இருக்கின்றது. இவர்கள் மற்றவர்களை கணத்திற்குரியவர்களாக எண்ணி

### சிறுவர்க்கான கேள்விகள்

1. யாக்கோபு யாரை ஏன் ஏமாற்றினான்?
2. உண்மையுள்ளவர்களை கர்த்தர் என்ன செய்வார்?
3. கொர்நெலிபு யாருடன் எதற்காக காத்திருந்தார்?
4. ஆபிரகாமும் சாராளும் யாரை உபசரித்தனர்?
5. பொய் சொன்னதினால் அனனியா, சப்பிராள் என்ன ஆயினர்?

நடத்துகின்றனர். இது மிகவும் வியப்பாக இருக்கலாம். ஆயினும், நம்மில் இயல்பாக இருக்க வேண்டும் என ஆவியானவர் சொல்கின்றார் (பிலிப்பியர் 2:1–5). அது தான் கிறிஸ்துவின் சிந்தையாகவும் இருக்கின்றது.

### 3. திருப்தியான குடும்பம்

**2 ராஜாக்கள் 4:13** "அவன் கேயாசியைப் பார்த்து; இதோ,இ ப்படிப்பட்டச கலச லக்கரணையோடும் எங்களை விசாரித்து வருகிறாயே, உனக்கு நான் என்ன செய்யவேண்டும்?ர ஜாவினிடத்திலாவது சேனாபதியினிடத்திலாவதுஉ னக்காகந ான்பே ச வேண்டிய காரியம் உண்டோ என்று அவளைக் கேள் என்றான். அதற்கு அவள்; என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய்க் குடியிருக்கிறேன் என்றாள்."

அடுத்ததாக, இந்த குடும்பத்தாரிடம் நாம் பார்க்கின்ற குணம் என்னவென்றால், இவர்கள் திருப்தியுள்ள குடும்பமாக இருக்கின்றனர். குறைகள் இல்லாமல் திருப்தியாக இருப்பது என்பது எளிதானது தான். குறைகள் இருந்தாலும், அதகை குறையாக எண்ணாமல், திருப்தியுடன் வாழ்வது கடினமானதும், அதே வேளையில் மிக சிறந்ததுமாகும். நாம் நம்மிடம் உள்ள நிறைகளை யோசித்து, யோசித்து சொல்வோம். ஆனால் குறைகளை படபடவென்று கொட்டித்தீர்த்துவிடுவோம். ஏனெனில் நம்மிடம் உள்ள நிறைகளைவிட குறைகளை பற்றிய சிந்தனையே நம்மில் மேலோங்கி இருப்பதால் தான். போதுமென்கின்ற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த லாபகரமானது (1 தீமோத்தேயு 6:6–8).


### 4. விசுவாசமுள்ள குடும்பம்

**2 ராஜாக்கள் 4:21,22** "அப்பொழுதுஅ வள் ஏறிப்போய்,அ வனைதே வனுடையம னுஷன் கட்டிலின்மேல் வைத்து, அவன் வைக்கப்பட்ட அறையின் கதவைப் பூட்டிக்கொண்டுபோய், தன் புருஷனிடத்தில் ஆள் அனுப்பி; நான் சீக்கிரமாய் தேவனுடைய மனுஷன் இருக்குமிடமட்டும்போய்வரும்படிக்கு, வேலைக்காரரில்ஒ ருவனையும்ஒ ருக முதையையும் எனக்கு அனுப்ப வேண்டும் என்று சொல்லச் சொன்னாள்."

சூனேமியாளின் குடும்பத்தாரிடம் நாம் அறிய வேண்டிய மற்றொரு காரியம். அவர்கள் விசுவாசமுள்ள குடும்பமாக இருந்தனர். தங்கள் வாழ்வின் பிரச்சனைகளை மனிதர்களிடமல்ல, கர்த்தரிடமே அறிவிக்கும் தன்மை உடையவர்களாக இருந்தனர். வேதாகமத்தில் யாரெல்லாம் தங்கள் பிரச்சனைகளை, துன்பங்களை கர்த்தரிடம் கொண்டு சேர்த்தார்களோ, அவர்கள் அனைவரும் காரியசித்தி பெற்றனர். ஏனெனில் தம்மை தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கின்ற கர்த்தராவர் (எபி. 11:6). ஆகையால், நாமும் இந்த குடும்பத்தினரை போல கர்த்தரிடம் உறுதியான விசுவாசம் கொண்டு, கர்த்தருக்கு பிரியமான குடும்பமாக இருப்போம். கர்த்தர் இந்த காரியங்களில் நமக்கு உதவிசெய்வாராக.

## பொதுவான செய்திகள்


### கோடை காலத்தில் செய்ய வேண்டியவை



**வெங்காயம் :** வெயில் காலங்களில் பலரை வாட்டி எடுக்கும் பிரச்சனை நீர் கடுப்பு என்கிற நீர்களுக்குத் தான். சிறுநீர் வராமல் பாதிக்கப்படுவோருக்கு சிறந்த மருந்தாக வெங்காயம் இருக்கும். அத்துடன் உடலில் உள்ள செல்கள் பாதிக்கப்படாமல் இருக்க சூரிய ஒளியின் தாக்கத்தை இது குறைத்துவிடும். ஆதலால், வெங்காயத்தை அதிக அளவில் உணவில் சேர்த்து கொள்வது நல்லது.



**இளநீர் :** கோடை வெயிலை சமாளிக்க இளநீர் அற்புதமான உணவாகும். இதில் அதிக அளவில் எலெக்ட்ரோலைட்கள், தாதுக்கள் உள்ளன. இந்த இயற்கை அமிர்தத்தை குடித்துவந்தால் வெயிலினால் உண்டாக கூடிய நோய்களில் பாதிப்பு குறைவு.



**ஆரஞ்சு :** நீர்ச்சத்து மிகுதியாக இருக்க கூடிய பழங்களில் ஆரஞ்சும் ஒன்று வைட்டமின் சி அதிக அளவில் இருப்பதால் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். அத்துடன் பொட்டாசியம் அளவும் உடலில் உயரும். இதில் அதிக அளவில் எலெட்ரோலைட் இருப்பதால் உடனடி ஆற்றல் உங்களுக்கு கிடைக்கும்.



**தயிர் :** நீர்ச்சத்து குறைபாடு மற்றும் உடனடி ஆற்றலை கொடுக்கும் சிறந்த உணவு தயிர். செரிமான கோளாறுகளை தடுக்கும் அற்புதமான உணவு இது. வாரத்திற்கு குறைந்தது 3-4 முறை தயிரை உணவில் சேர்த்து கொண்டால் வெயில் கால பாதிப்புகள் குறையும்.

பிரியமான வாலிபர்களே! உங்கள் அனைவரையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். கர்த்தர் ரொம்பவும் நேசித்து அழகாக உண்டு பண்ணின ஒன்று குடும்பம் ஆகும். வேதாகமத்தில் முதல் குடும்பத்தை தேவன்தான் உருவாக்கினார். பூமியின் மனுஷனை மண்ணினாலே உருவாக்கி தம்முடைய ஜீவ சுவாசத்தை அவன் நாசியில் ஊதி அவனை ஜீவ ஆத்துமாவாக்கி அவனுக்கு ஆதாம் என்கிற பெயரை சூட்டினதுமல்லாமல், ஆதாமுக்கு அயர்ந்த நித்திரை வரப்பண்ணி அவன் விலா எலும்பை எடுத்து இன்னொரு உயிராக மனுஷியை படைத்தார். அந்த **(மனுஷியை 2:22)** இன்னொரு உயிரான மனுஷனாகிய ஆதாமுக்கு துணையாக திருமணம் செய்து வைத்து அவர்களை குடும்பமாக மாற்றினார் **(ஆதி 2:23,24)**.

இப்படிப்பட்ட அழகான தேவன் அமைத்த ஒரு குடும்பத்திற்கென்று வீடு வேண்டுமல்லவா, அதையும் கர்த்தர் ஒரு செழிப்பான தோட்டமாக உருவாக்கி சகலவித பழங்களையும் அந்த ஆதி குடும்பத்திற்கு உணவாக கொடுத்தார் **(ஆதி 3:1)**. அவர்களை தேவன் அழைத்து கொடுத்த குடும்பத்தில் இன்பமாக சமாதானமாக, சந்தோஷமாக, பாவமில்லாமல் வாழ்ந்து வந்தனர்.

கர்த்தர் தோட்டததை (ஏதேன்) அமைத்துக் கொடுத்த அதே வேளையில் ஒரு கட்டளையையும் அவர்கள் கடைபிடிக்கும்படி கொடுத்திருந்தார். அது என்னவென்றால், இந்த ஆதி குடும்பமாகிய ஆதாமும், ஏவாளும் தோட்டமாகிய ஏதேனில் உள்ள எல்லா கனிகளையும் உணவாக உட்கொள்ளலாம். ஆனால் ஒரே ஒரு மரத்தின் கனியைத் தவிர! அந்த கனியை சாப்பிடும் நாளில் மரித்துப் போவோம் என்ற கர்த்தர் கட்டளையிட்டதாகவும் கூறினான்.

உடனே அந்த குடும்பத்திற்கு சம்பந்தமில்லாத கர்த்தருடைய உறவிலிருந்த இந்த அழகான குடும்பத்தை கலைக்க வந்த அந்த சர்ப்பம் அவனை சாப்பிடும்படி தூண்டி அவள் மாத்திரம் தன் கணவனாகிய ஆதாமையும் ஏவாள் மூலமாக செய்யக்கூடாது என்று சொல்லியிருந்த ஒன்றை செய்யும்படி செய்தது **(ஆதி 3:2,3,4)**.

இருவரும் கர்த்தருடைய கட்டளையை மீறி பாவம் செய்ததால் கர்த்தர் அமைத்து கொடுத்த ஆசீர்வாதமான வீடாகிய ஏதேன் தோட்டத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர்.

குடும்பம் என்பது மனித திட்டமல்ல. தேவனுடைய திட்டமாயிருக்கிறது. இதில் தேவ கட்டளையை நிறைவேற்றப்பட வேண்டுமே ஒழிய தனிமனித ஆசாபாசங்களுக்கு இடமில்லை **(எபே 5:23,24)**. ஆனால், சாப்பிடும் நாளில் அவர்கள் கடினமான தண்டனையான மரணத்தை சந்திக்க நேரிடும் என கட்டளை கொடுத்திருந்தார். இந்தக் கட்டளையை உறுதியாக கடைபிடித்த நாள் வரை தோட்டத்தில் எந்தவித அசம்பாவிதமும் நடைபெறவில்லை. ஆனால், இப்பொழுது இந்த குடும்பத்தில் இப்பொழுது புதியதாக குடும்பத்திற்கு சம்பந்தமில்லாத ஒருவர் உள் நுழைந்து. ஏவாளிடம் பேசி ஒரு நல்லுறவை ஏற்படுத்தி ஒருமுறை ஏவாளிடம் வந்து நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என மாற்றி கேட்டது. உடனே ஸ்தீரியானவள் தோட்டத்திலுள்ள எல்லா கனிகளையும் புசிக்கலாம். தோட்டத்தின் நடுவில இருக்கிற கனியை புசிக்க வேண்டாம் என கர்த்தர் கட்டளை கொடுத்ததாகவும் அங்கே ஆதாமும் ஏவாளும் கர்த்தருடைய கட்டளையை மீறினதால் தண்டனையாக தேவ உறவை இழந்து சாபத்தை பெற்றனர் அவருடைய கட்டளையை மீறுவது பாவம். எனவே தேவசித்தம் நிறைவேற குடும்பத்தில் ஒன்றாக பாடுபடுவோம்.

– உங்கள் அண்ணன்
**JP**

பாடம் - 3

# தொல்பொருள் ஆராய்ச்சியிலிருந்து சாட்சியங்கள்

## Evidence from Achaeology

இயேசு கிறிஸ்துவைக் குறித்தும், ஆதி கிறிஸ்தவத்தைக் குறித்தும் தொல்பொருள் ஆராய்ச்சி வெளிப்படுத்துவது என்ன? புதிய ஏற்பாட்டுச் சத்தியத்தை நிரூபிக்கும் வகையில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஏதாவது இடங்களையோ அல்லது கலை பொருட்களையோ கண்டுபிடித்துள்ளார்களா?

பண்டைய நகரங்களைத் தோண்டிப்பார்த்து, அல்லது இஸ்ரவேலின் பட்டணங்களையோ கிராமங்களையோ கூடத் தோண்டிப் பார்த்து, புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் (அகழ்வாராய்ச்சி யாளர்கள்) புதிய ஏற்பாட்டின் வரலாறு மற்றும் பூகோள ரீதியான சரியான உண்மையைத் திரும்பத் திரும்ப உறுதிப்படுத்துகின்றனர். இப்படியாக, புதிய ஏற்பாட்டின் நம்பகத்தன்மையை உயர்த்தியிருக்கின்றனர்.

### வரலாற்று ஆசிரியராகிய லூக்கா

அப்போஸ்தலர் நடபடிகள் மற்றும் தனது பெயரைச் சுமந்து நிற்கும் சுவிசேஷப் புத்தகத்தை, லூக்காதான் எழுதினார் என்பதற்கு உட்புறச் சாட்சியங்கள் குறிப்பிடுகின்றன. இந்த இரண்டு புத்தகங்களும் புதிய ஏற்பாட்டின் நான்கில் ஒரு பகுதியைக் கொண்டிருப்பதால், லூக்கா நம்பத் தகுந்தவரே என்று அறிவது முக்கியமானது.

அநேக ஆண்டுகளாக, பிற வரலாற்று ஆசிரியர்கள் “லூக்கா ஒரு சார்புத் தன்மையுடைய வரலாற்று ஆசிரியர் அல்ல; ஏனெனில் அவர் குறிப்பிடும் ஜனங்கள் இடங்கள், மற்றும் சம்பவங்களெல்லாம் திருமறைக்கு அப்பால் வேறு எங்கும் குறிப்பிடப்பட வில்லை” என்று யூகித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், சமீப வருடங்களில் அகழ் வாராய்ச்சியாளர்கள் லூக்கா எழுதியவைகள் உண்மை என ஒப்புக்கொண்டு, அவரைக் குற்றப் படுத்தினவர்களை அமைதிப்படுத்தியுள்ளனர்.

### இயேசுவின் பிறப்பைச் சூழ்ந்திருந்த நிகழ்ச்சிகள்

இயேசுவின் பிறப்பைச் சூழ்ந்திருந்த நிகழ்வுகள் தவறானவை என்று வரலாற்று ஆசிரியர்கள் சொல்லிக் கொண்டிருந்தனர் (லூக்கா 2:1-3). அந்த நேரத்தில் குடிமதிப்பு எழுதப்படும் சூழல் இருக்க வில்லை; எனவே அதற்காக ஜனங்கள் தங்களுடைய மூதாதையர்களின் ஊர்களுக்கு போகவில்லை. சிரியாவின் இந்த கணக்கெடுப்புக்கு கட்டளையிடவில்லை என்று அவர்கள் வாக்குவாதம் செய்கின்றனர்.

பிறகு அகழ்வாராய்ச்சியாளர்கள், ரோம அரசு ஒவ்வொரு பதினான்காவது வருடத்திலும் வரிச் செலுத்துகிற அனைவரையும் குடிமதிப்பு எடுத்து பதிவு செய்து வந்தது என்பதைக் கண்டுபிடித்தார்கள். கி.மு. 8வது ஆண்டில் அப்படியொரு கணக்கெடுப்பு நடந்ததையே லூக்கா அநேகமாக குறிப்பிட்டுள்ளார்.

அதற்குப் பிறகுதான், அந்தியோயாவிலிருந்த ஒரு பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் மூலம் கி.மு. 7ம் ஆண்டில் க்யரிநியஸ் சிரியாவின் தேசாதிபதியாக இருந்ததற்கான குறிப்பை அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர். இப்பொழுது க்யரிநியஸ் இரண்டு முறை தேசாதிபதியாக, ஒரு முறை கி.மு. 7-ன் துவக்கத்திலும் மறுபடியும் கி.பி. 6லும் பதவி வகித்திருந்தார் என்று நம்பப்படுகிறது.

எகிப்தின் கட்டளைப்படி கணக்கெடுப்பினை முன்னிட்டு பேப்பரஸ் பதிவேட்டில் அனுப்பப்பட்ட கட்டளைக் குறிப்பையும் அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அந்தக் குறிப்பில், “விரைவில் வரும் கணக்கெடுப்பை முன்னிட்டு, எந்தக் காரணத்துக்காகவாகிலும் தங்கள் சொந்த ஊரில் குடியில்லாதவர்கள் தங்கள் அரசுக்கு சம்பந்தப்பட்ட சொந்த ஊருக்குத் திரும்பவும், வந்து தங்கள் குடும்ப பதிவேடுகளை நிறைவு செய்ய வேண்டும்” என்று எழுதப்பட்டிருந்தது.

– அடுத்த இதழில் தொடரும்...

# யாக்கோபின் குடும்பம்

கடவுளுக்கு பிரியமான செல்லப்பிள்ளைகளா ! எப்படி இருக்கிறீர்கள்? உங்களை ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.

வேதாகமத்தில் யாக்கோபு என்பவரை பற்றி படிக்கின்றோம். அவரை அநேகர் எத்தன் யாக்கோபு (ஏமாற்றுக்காரன்) என்றே அழைப்பவர்களும் உண்டு. ஈசாக்கு மற்றும் ரெபெக்காள் தம்பதியின் இரட்டை மகன்களில், இரண்டாவது மகன் இவர். அக்காலத்தில் சட்டப்படி தகப்பனுடைய சொத்தில் மூத்த மகனுக்கு இரண்டு மடங்கு கொடுப்பார்கள். அதற்கு ஆசைப்பட்ட யாக்கோபு, தன் அண்ணன் ஏசாவை, அவன் வேட்டையாடி பசியோடு வீடு திரும்பும்போது, பயிற்றங்கூழை கொடுத்து, அந்த சொத்தினை (சேஷ்டபுத்திரபாகத்தை) ஏமாற்றி வாங்கிக் கொண்டான்.

பிற்பாடு தன் தாயுடன் சேர்ந்து தன் தகப்பனையும் ஏமாற்றினான். ஏசாவின் கையில் ரோமம் அதிகமாக இருக்கும் அதினால் யாக்கோபு ஆட்டு ரோமத்தை தன் கையில் போர்த்துகொண்டு, தன் அப்பாவுக்கு வயதானதினால் பார்வை மங்கலாக இருந்ததினிமித்தம் ஏமாற்றி ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டான்.

என்னவானது? எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஒன்றுமில்லாமல், உயிருக்கு பயந்து கானான் நாட்டை விட்டு வேறு நாட்டிற்கு ஓடிப்போனான். அங்கே போய் தன் மாமன் வீட்டில் வேலைக்காரனாக சேர்ந்து உண்மையாக உழைத்தான். கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார். அதினால் இரண்டு பெரிய பரிவாரங்கள் உடைய வசதியுள்ளவனாக உயர்த்தப்பட்டான்.

அவன் மாத்திரமல்ல அவன் குடும்பத்தில் அவனது பிள்ளைகளும், மனைவியும் ஏமாற்றும் போது அவர்களே ஏமாந்து போனார்கள். பிறகு அவர்கள் திருந்தி உண்மையுள்ளவர்களாக மாறின போது, கர்த்தர் அவர்களை ஆசீர்வதித்தார்.

பிள்ளைகளா ! படிக்கின்ற மாதிரியோ, சேட்டை செஞ்சிட்டு இல்லாத மாதிரியோ அப்பாவையோ, அம்மாவையோ ஏமாற்றுவது, பள்ளி ஆசிரியரை



மற்றும் சபை ஊழியக்காரரை ஏமாற்றுவது என்பது உங்களை நீங்களே, அதாவது தன்னை தானே ஏமாற்றுவதாக இருக்கின்றது. ஏமாற்றுகின்றவர்கள் ஏமாந்துபோவார்கள். ஆனால், உண்மையாக இருப்பவர்களை கர்த்தர் ஆசீர்வதித்து உயர்த்துவார். நீங்களும் படிக்கின்ற காரியங்களில் உண்மையாய் இருக்கிறீர்களா? இல்ல போனில் கேம் விளையாடுவது, டிவி பார்ப்பது என்று பொழுது போக்கி கொண்டிருக்கிறீர்களா? அம்மாவுக்கும், அப்பாவுக்கும் உண்மையாய் இருக்கிறீர்களா? உண்மையாய் இருப்பதினால் சிரமப்படுகின்றீர்களாக இருந்தால், கர்த்தர் உங்களையும் அபரிவிதமாக ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம் : நீதிமொழி 28:20** “உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான் ஐசுவரியவனாகிறதற்குத் தீவிரிக்கிறவனோ ஆக்கினைக்குத் தப்பான்.”

**– அன்பு ஏசுதாஸ்**

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. M. ராஜா – கரூர்
2. M. ஜோனா – கரூர்
3. S. லக்சிதா – கரூர்
4. S. கனிஸ்கா – கரூர்
5. A. ஹானா ஜோதி – மதுரை
6. A. கார்பஸ் பிலேமோன் – மதுரை

# கொர்நெலியுவின் குடும்பம்



ஹாய் குட்டீஸ் ! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இந்த முறை (தேவனுடைய) கடவுளுடைய வார்த்தையை ஆவலாக கேட்ட ஒரு குடும்பத்தை பற்றி தான் படிக்கப்போகிறோம்.

இத்தாலியா எனப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய ஒரு மனுஷன் இருந்தான். அவன் பெயர் கொர்நேலியா அவன் செசரியா என்ற ஊரில் வாழ்ந்து வந்தான். இவர் மிகுந்த தேவபக்தியுள்ளவராகவும், குடும்பமாக கடவுளுக்கு கீழ்ப்படிகிறவராகவும், மக்களுக்கு நிறைய நன்மைகளை செய்கிறவராகவும், தேவனை நோக்கி எப்போதும் ஜெபம் பண்ணுகிறவராகவும் இருந்தான். ஆனாலும் அவர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவராயிருந்தார்.

அதினால் ஒரு நாள் இவர் ஜெபஞ்செய்து கொண்டிருக்கும் போது தேவதூதன் ஒருவன் வந்து; கொர்நேலியுவே! நீ செய்த நன்மையான காரியங்களும் ஜெபங்களும் கடவுளுடைய சமூகத்தில் வந்து உன்னை நினைவுப்படுத்துகிறது. இப்போதும் நீ யோப்பா என்ற பட்டணத்திலிருக்கிற பேதுரு என்பவரை இருக்கிறார். அவனை அழைத்து தேவனுடைய வார்த்தைகளை கேட்டு அதின்படி செய் என்றார். உடனே கொர்நேலியு ஆள் அனுப்பி பேதுருவை அழைத்து வரச் செய்தான். இவன் அனுப்பின வேலையாட்கள் வருவதற்கு முன்னே அவன் தன் குடும்பத்தாரையும், தன் உறவினரையும் தன் விசேஷித்த சிநேகிதரையும்



அழைப்பித்து வரவழைத்து பேதுருவுக்காக காத்திருந்தான். அவரால் தனக்கும் கூடிவந்திருக்கும் அனைவருக்கும் சொல்லப்பட போகிற தேவ வார்த்தை என்னவென்பதை தெரிந்துகொள்ள ஆவலாய் அவன் காத்திருந்தான்.

குட்டீஸ் ! நாமும் இந்த கொர்நேலியுவைப்போல குடும்பமாக சபைக்கு சென்று தேவனை தொழுகை செய்து, வேத ஆராய்ச்சி சிறப்பு வேத கூட்டங்கள், சிறுவர் வேதாகம பள்ளி ஆகியவைகளில் கலந்து ஆவலாய் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு தேவ ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளலாம்.

**மனப்பாட வசனம் : *சங்கீதம் 119:131*** "உம்முடைய கற்பனைகளை நான் வாஞ்சிக்கிறபடியால், என் வாயை ஆவென்று திறந்து அவைகளுக்கு ஏங்குகிறேன்.

**– குயினி பிரதீப்**

# ஆபிரகாமின் குடும்பம்

சிறுவர் பகுதி

அன்பான மழலை செல்லங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். பரிட்சை எல்லாம் நல்லா எழுதியிருப்பீங்கனு நம்புறேன். உங்களுக்கு என் வாழ்த்துக்கள். விடுமுறை நாட்களை பிரயோஜனமாச் செலவழியுங்கள். அக்கா உங்களுக்காக ஜெபிக்கின்றேன்.

இந்த மாதம் நாம் விசுவாசத்தின் தந்தையாகிய ஆபிரகாமின் குடும்பத்திடம் கற்றுக்கொள்ள நிறைய நல்ல காரியங்கள் நமக்கு இருக்கு. அதில் ஒரு காரியத்தினை பற்றி படிப்போம். அது என்னவென்றால் அந்நியர்களை உபசரிப்பது அதாவது வழிபோக்கர்களுக்கு உணவளிப்பது.



அப்பொழுது ஆபிரகாமிற்கு 99 வயதும், அவர் மனைவி சாராவிற்கு 89 வயதும் இருக்கின்ற சமயம். அவர்கள் இருக்கின்ற வீட்டின் வழியே மூன்று வழிபோக்கர்கள் சென்றனர். இதனை கண்ட ஆபிரகாம் அவர்களிடம் சென்று, தரை மட்டும் குனிந்து, நீங்கள் அனைவரும், தயவுகூர்ந்து என் வீட்டில் வந்து சாப்பிட்டுவிட்டு, இளைப்பாறி செல்லுங்கள் என்று அன்போடு வருந்தி அழைத்தார்.

அதனால் அந்த வழிபோக்கர் ஆபிரகாமின் வீட்டிற்கு சென்றனர்.

99 வயதான ஆபிரகாம் என்ன செய்தார் தெரியுமா? உடனே தீவிரமாய் வீட்டிற்குள் சென்று, சாராளிடத்திற்குப் நீ சீக்கிரமாய் மூன்றுபடி மெல்லிய மாவு எடுத்துப் பிசைந்து, அப்பம் சுடு என்று சொன்னார். 89 வயதான சாராள் சரி உடனே செய்கிறேன் என செய்தார்கள். நாம் எப்படி? அம்மா அப்பா சொல்ற வேலையை எப்படி செய்கிறோம்? சலித்துக்கொள்கிறோம் அல்லவா?

அத்தோடு நின்றாரா ஆபிரகாம்? இல்லை. மாட்டுமந்தைக்கு ஓடி, ஒரு நல்ல இளங்கன்றைப் பிடித்து, வேலைக்காரன் கையிலே கொடுத்து அவனை அதை சமைக்க சொன்னார். அவன் அதைச் சீக்கிரத்தில் சமைத்தான். யாருக்கு? ஆபிரகாமின் சொந்தகாரங்களுக்கா?இல்லை. யாரென்று தெரியாத பசியோடு இருந்த வழிபோக்கர்களுக்கு.

பிறகு, ஆபிரகாம் வெண்ணையையும் பாலையும் சமைப்பித்த கன்றையும் எடுத்து வந்து, அவர்கள் முன்பாக வைத்து, அவர்கள் அருகே மரத்தடியில் நின்று கொண்டிருந்தான்; அவர்கள் புசித்தார்கள். ஆபிரகாம் அவர்களை வழிபோக்கர் என்று நினைத்தான். ஆனால், வந்தவர்களோ தேவதூதர்கள். அவர்கள் ஆபிரகாமின் உபசரிப்பை ஏற்று, அவனையும் அவன் மனைவி சாராளையும் ஆசீர்வதித்தார்கள்.


**வாசகர்களின் கவனத்திற்கு**

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,
A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.


மழலைச் செல்லங்களே, நாமும் ஆபிரகாம் சாராள் போல பசியோடிருக்கின்றவர்களுக்கு உணவளிப்போம். உதவி செய்வோம். அதனை அன்போடும், உண்மையான கரிசனையோடும் செய்வோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம் : எபிரேயர் 13:2**
"அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு."

**– பிரியா ஆண்டனி**

இம்மாதம் பிறந்த நாள் மற்றும்
திருமண நாளைக் காணும்
வாசகர்கள் அனைவருக்கும்
கிருபையுள்ள வார்த்தை
ஆசிரியர் குழுவின் சார்பாக
வாழ்த்துக்களும், ஜெபங்களும் !

# அனனியாவின் குடும்பம்... (பொய்யின் குடும்பம்)

ஹாய் செல்லக்குட்டீஸ் உங்கள் எல்லோருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினாலே வாழ்த்துதல் மற்றும் ஸ்தோத்திரங்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

செல்லங்களா ! அனைவரும் முழு ஆண்டு தேர்வினை முடித்துவிட்டு கோடைகால விடுமுறையில் இருப்பீர்கள் என்று நினைக்கிறேன். நல்லது சரி இந்த மாதம் “பொய் சொல்லுதல்”, என்ற தலைப்பின் கீழாக ஒரு வேதாகம சம்பவத்தைப் பார்க்கலாமா?

பொய் பேசுதல், பொய் பேசினால் என்ன? அது என்ன ஒரு மிகப்பெரிய பாவமா? என்ற பல கேள்விகள் உங்களுக்குள்ளே இருக்கிறது. சரி வாங்க! வேதாகமத்தின் மூலம் அதற்கான விடைகளைப் பற்றி தெரிந்துகொள்வோம்.

அப்பொழுது, அங்கிருந்த அனனியா மற்றும் சப்பீரா என்னும் பேருள்ள ஒரு கணவன் மனைவி இருந்தார்கள். அவர்கள் தங்களுக்கென்று ஒரு நிலம் வைத்திருந்தார்கள். அந்த நிலத்தினை விற்ற பணத்தில் பாதியை தங்களுக்கென்று வைத்துக் கொண்டார்கள். மற்றொரு பாதி மட்டும் பேதுருவிடம் வந்து கொடுத்தான் அனனியா. பேதுரு இயேசுவினுடைய சீடர் அல்லவா? அவருக்கு எல்லாமே தெரியும் அல்லவா? அனனியா பேதுருவிடம் என்னுடைய நிலத்தின் மொத்த பணமும் இவ்வளவுதான் என்று சொல்லி பேதுருவின் காலடியில் வைக்கிறான்.

இயேசு கிறிஸ்து ஊழியக்காரர்கள் பல ஊர்களுக்கு சென்று தேவ வார்த்தைகளை மக்களுக்கு சொல்லிக் கொண்டு வந்தார்கள். அப்பொழுது எருசலேமில் உள்ள ஜனங்கள். கடவுள் உன்னை தண்டிப்பார் என்று சொன்ன உடனே அனனியா அந்த இடத்திலே செத்துப்போன பிறகு 3 மணி நேரம் கழித்து அனனியாவின் மனைவி சப்பீரா பேதுருவை பார்க்க வந்தாள் பேதுரு சப்பீராவிடம் நீங்கள் நிலத்தினை விற்ற பணம் இவ்வளவு தானா? என்று கேட்டதற்கு ஆம், இவ்வளவு தான் என பொய் சொன்னாள். பொய் சொன்னதினால் தன்னுடைய கணவன் இறந்துவிட்டான் என்று தெரியாமல் தானும் அதே தவறை செய்தாள். உடனே பேதுரு உன் கணவனை போல நீயும் பொய் சொன்னதினால் தேவன் உன்னை தண்டிப்பார் என்று சொன்ன உடனே அவளும் அதே இடத்தில் செத்துப்போனாள்.



இந்த சம்பவத்தின் மூலமாக நாம் அறிந்துகொள்வது என்னவென்றால் நாம் தேவனுக்கும், தேவனுடைய மனுஷர்களுக்கும் விரோதமாக பொய் சொன்னால் நிச்சயமாக தண்டிக்கப்படுவோம்.

என்ன செல்லங்களா ! சம்பவம் நல்லா இருந்ததா? இந்த மாதம் முழுவதும் பொய் சொல்ல மாட்டேன் என்று பயிற்சி செய்யுங்கள். பிறகு அதுவே ஒரு நல்ல பழக்கமாக மாறிவிடும். அப்படி மாறினால் நீங்கள் வாழ்நாள் முழுவதும் பொய் சொல்ல மாட்டீர்கள். பொய் சொல்லாமல் எல்லோரும், ஒரே மனதாக ஆர்வமாக தங்களிடமாக உள்ள பொன், பொருள்கள், நிலம், வீடு இதுபோன்று வைத்துள்ளதை பேதுருவிடம் கொடுத்து இல்லாத கஷ்டப்படக்கூடிய மக்களுக்கு பகிர்ந்து கொடுத்து அவர்களையும் சந்தோஷமாக வாழும்படியாக மக்களை தங்களிடம் உள்ளதையெல்லாம் பேதுருவிடம் கொடுத்தார்கள். பேதுரு அவைகளை வாங்கி அனைவருக்கும் பகிர்ந்து கொடுத்தார்.

இந்த வார்த்தையை கேட்ட பேதுருவுக்கு அதிர்ச்சியாக இருந்தது. பேதுரு அனனியாவை பார்த்து ஏன் தேவனுக்கு (கடவுளுக்கு) விரோதமாக பொய் சொல்கிறாய் இருக்கும் பொழுது தேவன் உங்களை ஆசீர்வதிப்பார் ! மீண்டும் அடுத்த மாதம் உங்களை சந்திக்கிறேன். நன்றி. வணக்கம்.

**மனப்பாட வசனம் : வெளி 21:8** “பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும் அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்.

**– ஏஞ்சலின் கமலம்**

## மே மாத கேள்விகள்

1. சிறைச்சாலை அதிகாரியும் அவன் வீட்டாரும் எப்பொழுது ஞானஸ்நானம் பெற்றனர்?
2. கொர்நெலியுவிற்கும் அவன் வீட்டாருக்கும் பேதுரு கொடுக்கச் சொன்னது என்ன?
3. கர்த்தர் யாரை தன் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்?
4. யார் நடுவிலிருந்து பிரிந்து போய், எதை தொடக்கூடாது?
5. பரலோகத்திலிருக்கின்ற பிதாவினால் யாருக்கு எப்பொழுது எது உண்டாகும் என ஆண்டவர் இயேசு சொன்னார்?
6. எதை விட்டுவிடாதிருக்க ஒருவருக்கொருவர் புத்திசொல்ல வேண்டும் என எபிரேய ஆசிரியர் சொல்கின்றார்?
7. யாரை நினைத்து, எதை சிந்தித்து, எதனை பின்பற்ற வேண்டும்?
8. யார் மிகுந்த கனிகளை கொடுப்பார் என ஆண்டவர் இயேசு சொன்னார்?
9. சூனேனியாள், எலிசாவை யாராக காண்பதாக தன் கணவனிடம் அறிவித்தாள்?
10. ஆதாம், ஏவாளிற்கு கர்த்தர் கொடுத்த கட்டளை என்ன?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 5-06-2022**

**அனுப்ப வேண்டிய முகவரி : சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

1. சங்கீதம் 14:1
2. நீதிமொழி 20:1
3. ஏசாயா 5:11
4. நீதிமொழி 17:28
5. நீதிமொழி 10:19
6. நீதிமொழி 28:26
7. நீதிமொழி 14:12
8. எபேசியர் 5:18
9. 1 கொரி 6:10
10. யாக்கோபு 1:5

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. A. டேவிட் ஜெயச்சந்திரன் - மதுரை
2. S. பாக்கியராஜம் - மதுரை
3. G. பீற்றர் பால்ராஜ் - ஆறுமுகநேரி
4. Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் - நெல்லை
5. A. லலிதா - புதுக்கோட்டை
6. S. அசோக்குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
7. Mrs. மேரி ராஜ் - மதுரை
8. Mrs. சாந்தி ஜோயல் - திருச்சி
9. S. டேவிட் சாந்தகுமார் - தென்காசி
10. Mrs. சுந்தரபாய் வில்லியம் - சேலம்
11. Mrs. ஹெப்ஸிபா தாமஸ் - படப்பை
12. C. வைலட் கிறிஸ்டோபர் - தளவாய்புரம்
13. Mrs. சாந்தி வில்லியம் - புதுக்கோட்டை
14. Mrs. ஹெலன் திலக் - மதுரை
15. Mrs. தெல்மா ஸ்டான்லி - மதுரை
16. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் - மதுரை
17. B. ஜாய்ஸ் ஜோசுவா - வெள்ளறம்
18. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி - திருச்சி
19. Mrs. காந்தா மனோகரன் - திருச்சி
20. P. சமாதானம் பீட்டர் - விருதுநகர்
21. A. ஆனந்த கதிரோன் - சென்னை
22. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் - சேலம்
23. Mrs. பெரில் பாஸ்கர் - படப்பை
24. Dr. D.S. ஜெபநேசன் - திண்டுக்கல்
25. Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் - தூத்துக்குடி
26. A. ரோஸ்மேரி - சென்னை
27. Mrs. பிரேமா பால்சிங் - தென்காசி
28. Mrs. R.P. டேவிட் - ஏற்காடு
29. T. மேரி சுமதி - திருச்சி
30. P. பிரபாவதி - மூலனூர்
31. D. மீனாள் - மூலனூர்
32. D. குளோரி திலகவதி - சென்னை
33. D. ஜெயசுதா பொன்செல்வி - சென்னை
34. Mrs. D.I. அன்பு சுதந்திரம் - ஏர்வாடி
35. Mrs. இந்திரா பாண்டி - திருமங்கலம்
36. Mr. சூசை மரியான் - சென்னை
37. R. சரோஜா- தென்கலம்
38. Mrs. செல்லத்தாய் சுவாமி - மதுரை
39. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு - செங்கல்பட்டு
40. Mrs. D.J. அன்பு சுதந்திரம் - ஏர்வாடி
41. D. அலெக்சாண்டர் சாமுவேல் - சென்னை
42. G. ஏஞ்சலம்மாள் - மதுரை
43. J. விஜய் - மதுரை

### சென்ற மாத விடுபட்டவர்கள்

1. Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் - நெல்லை
2. Mrs. சுந்தரபாய் வில்லியம் - சேலம்

Place of Publication : Arasaradi, Madurai

Printed & Published by P.C. PHILEMON RAJAH

Printed at Classic Printers & Binders Madurai-2 ✆ 94421 23819

Registered News Paper No. : TNTAM/2011/42166


Postal Registration No. : TN/MA/67/2021 - 2023

Date of Publication : 8th May 2022

Posted at Arasaradi HPO on 10th 11th May 2022



## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்










அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்






## கைபிரதிகள்









உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431


## BIBLE STUDY BOOKS IN ENGLISH











AVAILABLE FOR SPECIAL PRICE!



If undelivered please return to :

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431


To